முதன்மை மாவட்ட நீதிமன்றம், திருவாரூர்

O.S. No.32/2024

2025-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 23 ஆம் நாள் வியாழக்கிழமை

1969-ம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 44-ன்படி பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**வா.சா. 2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜவஹர்மூர்த்தி | தந்தையார் பெயர் | ராஜப்பா |
| கிராமம் | திருக்களார் | வட்டம் | மன்னார்குடி |
| தொழில் | | வயது | 62 |

**(சாட்சியின் அடையாளம் சரிபார்க்கப்பட்டது).**

**முதல் விசாரணை**

நான் அசல் வழக்கில் 3ம் தரப்பினர். நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய பிரமாண வாக்குமூலத்தை படித்துப் பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அந்த சாட்சிய நிரூபண வாக்குமூலத்தை எனது சாட்சியத்தின் ஒரு பகுதியாக ஏற்குமாறு வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை**

எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரப்பெற்றதா என்றால் வழக்கறிஞர் சொல்லி வந்தேன். வாதி என் தங்கையாவார். பிரதிவாதி என் ஊர்காரர் என்ற வகையில் எனக்கு தெரியும். பிரதிவாதி, வாதியிடம் ரூ.9,00,000/- கடனாக தொகை பெற்றார். மேற்படி தொகையை திருத்துறைப்பூண்டி சார் பதிவாளர் அலுவலகத்தில் வாதியிடம் பிரதிவாதி வாங்கினார். அந்த சமயத்தில் நான், பிரதிவாதி, பிரதிவாதியின் மனைவி, தினேஷ் ஆகியோர் இருந்தோம். 1½ பைசா வட்டிக்கு கடனாக வாதி, பிரதிவாதிக்கு தொகை கொடுத்தார். வீட்டு பத்திரத்தை பிரதிவாதி, வாதியிடம் கொடுத்தார். 25.05.2022 ல் வாதியிடம் பிரதிவாதி தொகை பெற்றார். வாதியிடம் கடனாக பெற்ற தொகையை பிரதிவாதி திரும்ப கொடுக்கவில்லை. பிரதிவாதி, வாதிக்கு வீட்டை சார் பதிவாளர் அலுவலகத்தில் MOD செய்து கொடுத்தார். அந்த பத்திரத்தை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். மேற்படி பத்திரத்தில் நான் 2 வது சாட்சியாக கையெழுத்து போட்டேன். நான் தமிழில் கையொப்பம் செய்தேன். தினேஷ் முதலாவது சாட்சியாக கையெழுத்து போட்டார். அவர் ஆங்கிலத்தில் கையொப்பம் செய்தாரா, தமிழில் கையொப்பம் செய்தாரா என்று எனக்கு தெரியாது. புல எண்

என்னவென்று எனக்கு தற்போது ஞாபகமில்லை. திருக்களாரில் உள்ள சொத்தை பிரதிவாதி, வாதிக்கு எழுதிக் கொடுத்தார். அந்த சொத்து மாடி வீடு. தற்போது பிரதிவாதி சிதம்பரத்தில் வசித்து வருகிறார். பிரதிவாதி சிதம்பரத்தில் பணிபுரிந்து வருவதால் சிதம்பரத்தில் வசித்து வருகிறார். பதிவு செய்யப்பட்ட நாள், ஆவணத்தின் எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாதி, பிரதிவாதியிடம் 500 நோட்டுகளாக மொத்தம் 19½ கட்டுகள் தொகை கொடுத்தார். மேற்படி தொகையை நான் எண்ணி பார்த்தேனா என்றால் இல்லை. பல்வேறு தேதிகளில் பிரதிவாதி, வாதிக்கு தொகை திரும்ப செலுத்தியுள்ளார் என்றால் இல்லை. பிரதிவாதி, வாதிக்கு ஒரு ரூபாய் கூட நான் கொடுக்கவில்லை என என்னிடம் சொல்லியுள்ளார். பிரதிவாதி தொகை திரும்ப கொடுக்காத விபரத்தை என் தங்கையும் என்னிடம் சொல்லியுள்ளார். கொடுக்கல்-வாங்கல் சம்மந்தமாக வாதி, பிரதிவாதிகளுக்கிடையேயான உண்மை நிலவரம் எனக்கு தெரியாது. பிரதிவாதியிடம் கடன் தொகை உளவடைக்கப்பட்டதா என கேட்டேன், அவர் உளவடைக்கவில்லை என்று என்னிடம் சொன்னார். மற்றபடி பிரதிவாதி, வாதியிடம் எவ்வளவு தொகைகள் கொடுத்துள்ளார் என எனக்கு தெரியாது என்றால் சரி. வாதி என் சகோதரி என்பதால் வாதி கேட்டுக் கொண்டதற்கிணங்க தற்போது பொய்யாக சாட்சியம்

அளிக்கிறேன் என்றால் தவறு. வாதி, பிரதிவாதிக்கு எவ்வளவு தொகை திரும்ப செலுத்தினார் என்ற விபரம் எனக்கு தெரியாது எனவும் அதனால் சாட்சிய சட்டப்படி என்னுடைய சாட்சியம் ஏற்புடையதல்ல எனவும் சொன்னால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.10.23 14:51:30 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

திருவாரூர்.